[முற்பகல் 9-10]

திரு. கு. ரமணி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வல்லன்குளம் என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பெயரை அம்மன்குளம் என்று மாற்றிக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விடையளிக்க எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வி கேட்க விரும்புகிறார்கள்.

திரு. கு. ரமணி : அடுத்தபடியாக குளப்படுகைகளில், இடவசதியில்லாத காரணத்தால் ஏழைகளாக இருப்பவர்கள் அந்த நகர்ப்பகுதிகள் குளப்பகுதிகள் ஆகிவிட்டதால் அதில் அவர்கள் குடிசைகள் போட்டிருக்கும் இடங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதில் கஷ்டமிருக்கிறது என்று அதிகாரிகள் சொல்லுகிறார்களே, அதை நீக்கிவிட்டு பல ஆண்டுகளாக அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு, அவர்களுக்கு அதைப் பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் முடிவு எடுக்குமா ? அப்படிச் செய்தால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அங்கே தொடர்ந்து வாழ வசதியாக இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி அவர்கள் கேள்வியை சுருக்கமாகப் போடவேண்டும். இரண்டு கேள்விகளுக்கு பத்து நிமிடங்களாகிவிட்டன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; குளப்புறம்போக்குப் பகுதிகளில் குடிசை போட்டிருப்பவர்கள் அந்தப் பகுதியில் இருப்பது என்பது சரியாகயிராது. ஏனென்றால், பெருமழை அடிக்கும்போது அந்தக் குடிசைகள் தெப்பமாக மிதக்க ஆரம்பிக்கும். அவர்களுக்கு மாற்று மனை கொடுப்பதுபற்றி ஆலோசிப்பதற்கு அரசாங்கத்திற்கு தடை எதுவும் இல்லை.

சம ஊதியத் திட்டம்.

*263 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரேமாதிரியான வேலைக்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் சமமான நியாய ஊதியம் வழங்குவதற்கு 1969 ஆம் ஆண்டு 19-வது சட்டத்தைத் திருத்துவது குறித்து என்ன நிலையில் உள்ளது ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

1978 பிப்ரவரி 25[

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின்படி, சாகுபடி காலத்திலும் அறுவடை காலத்திலும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு (ஆண், பெண்) கொடுக்க வேண்டிய ஊதியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஒரேமாதிரியான ஒரே பணிக்கு அல்லது ஒரேமாதிரித் தன்மைக்கொண்ட பணிக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான ஊதியம் அளிக்கப்படுவதற்கு இச் சட்டத்தைத் திருத்துவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி.கே. கோதண்டராமன்: வேளாண்மைத் துறையில் பணிபுரியக் கூடியவர்களுக்கு மட்டும் சம ஊதியமா? அல்லது எந்த வேலையில் பணிபுரியக்கூடியவர்களாக இருந்தாலும் சம ஊதியம் கொடுக்கப்படக்கூடிய அளவிற்குச் சொல்லப்படுகிறதா? இதைப் பரிசீலனை செய்து ஒரு முடிவிற்கு வருவதற்கு எவ்வளவு காலமாகும்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களின் கேள்வி, வேளாண்மைத் தொழிலாளர்களைப் பற்றியது. அதற்கு மட்டும் பதில் சொல்லியிருக்கிறேன். எவ்வளவு காலமாகும் என்ற கேள்விக்கு விரைவில் என்பது எனது பதில்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வேளாண்மைத் துறையில் பணி புரியக்கூடிய பெண் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி நாள் ஒன்றுக்கு மூன்றரை ரூபாய் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. அதையே அதிகப்படியாகக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுவருகிற இந்த நேரத்தில் அந்தக் குறைந்தபட்சக்கூலியைக் கூடக் கொடுக்காமல் குறைவாகக் கொடுத்து ஏமாற்றக்கூடியதொரு சூழ்நிலையிருக்கிறது. விலைவாசியும் ஏறிவருகிறது. எனவே அதை உடனடியாகப் பரிசீலித்து அமல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : ஆண்களும் பெண்களும் செய்யும் ஒரேமாதிரியான வேலைகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்ற காரணத்தால் நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

திரு. கே. பண்ணை சேதுராம் : 1969 ஆம் ஆண்டு 19-ம் எண் சட்டம் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு மட்டும் இருக்கிறது. இந்தச் சட்டம் வேளாண்மைத் தொழிலாளர்கள் அல்லாத கட்டடங்கள் கட்டும் தொழிலாளர்கள் போன்ற பிற தொழிலாளர்களுக்கும் அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்கும்வகையில், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே சமமான சம்பளம் கிடைக்கும் வகையில் அந்தச் சட்டத்தைத்திருத்தியமைக்க பரிசீலனை செய்ய அரசுமுன்வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக ஊதியம் அளிக்கப்படுமா என்கின்ற கேள்வி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது குறித்து ஆராய்ந்து தகுந்த நேரத்தில் அரசு அறிவிக்கும்.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, ஒரே மாதிரியான வேலைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே அளவிலான ஊதியம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நீலகிரி மாவட்டத்தில் சில தோட்ட அதிபர்கள், ஒரேமாதிரியான வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரேமாதிரியான கூலி கொடுப்பதில்லை. அது அரசுக்குத் தெரியுமா ? அப்படியென்றால் அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நீலகிரி பகுதியில் என்ன நிலைமையிருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. இதற்கு தனிக்கேள்வி போட்டால் நன்றாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : ஒரேமாதிரியான வேலை செய்பவர்களுக்கு ஒரேமாதிரியான கூலி ஆண்களாக இருந்தாலும் சரி, பெண்களாக இருந்தாலும் சரி, ஒரே மாதிரியான கூலி கொடுக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இது சில தனியார் தொழிற்சாலைகளிலோ அல்லது பிரைவேட் கம்பெனிகளிலோ கொடுப்பதில்லை என்று சொன்னாலும், அரசாங்கப் பண்ணைகளில் அதாவது அரசாங்கமே நடத்துகின்ற விவசாயப் பண்ணை போன்றவைகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரேமாதிரியான கூலி கொடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

1978 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இது எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதைப்பற்றி தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் என் சார்பில் பதில் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : Equal Remuneration Ordinance of 1975 என்ற ஒன்று இருந்தது. அதையொட்டி 1976-ல் சட்டம் வந்திருக்கிறது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே மாதிரியான கூலி கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறது. எங்காவது இது விடப்பட்டு போயிருந்தால், அதைப்பற்றி தெரிவித்தால், அதை அங்கு செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அரசாங்கமே நடத்துகிற விவசாயப் பண்ணைகளில் இவ்விதமான பாகுபாடு இருக்கிறது, ஆண்களுக்கு ஒரு சம்பளமும், பெண்களுக்கு ஒரு சம்பளமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையை இப்படிப்பட்ட விவசாயப்பண்ணைகளில் மாற்றி ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்கின்ற வகையில் அரசாங்கமே முன் உதாரணமாக இருந்து எடுத்துக்காட்ட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The HON. THIRU S. RAGHAVANANDAM : Equal Remuneration Act is equal to one and all.

நெல்லை மாவட்டத்தில் அணுமின் நிலையம்.

*264 வினா— திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இடிந்தகரை அருகே கடல் பகுதியில் அணுமின் நிலையம் அமைப்பது சம்பந்தமாக மத்திய அரசு பரிசீலனை செய்ததை இந்த அரசு அறியுமா ?

(ஆ) ஆம் என்றால், அத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தென் மண்டலத்தில் புதியதொரு அணுமின்நிலையம் அமைப்பதற்கு மத்திய அணுமின்நிலைய இடத்தேர்வு குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு இடங்களில், இடிந்தகரைக்கு அருகிலுள்ள குந்தன்குளமும் ஒன்று. இவ்விடங்கள் பற்றிய விவர அறிக்கை மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.